செ.வெ.எண்: 06 நாள்: 03.11.2016

**தமிழக அரசின் திட்டங்களை பொது மக்களுக்கு விரைவாக கிடைக்கும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் சிறப்பாக செயல்பட வேண்டும் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.11.2016) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து பொது மக்களும் பயன் பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, வருவாய்த் துறை, கல்வித்துறை, மீன்வளத்துறை, சமூக நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் உள்ளிட்ட அனைத்துறை அலுவலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள டிராக்டர்கள், பவர்டிரில்லர்கள் போன்ற பல்வேறு வேளாண்கருவிகளின் எண்ணிக்கை குறித்த விபரம், கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில் கொள்ளமுதல் செய்யப்பட்ட வெள்ளாடுகள், கறவை மாடுகள் மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள் மற்றும் கறவை மாடுகள், கறவை மாடுகள் மூலம் தினமும் பெறப்பட்டு வரும் பாலின் அளவுகள் குறித்த விபரம், ஆவின் நிறுவனத்தின் மூலம் பால் கொள்முதல் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த விபரம். மீன்வளத்துறையின் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை போன்ற பல்வேறு விபரங்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும், நகராட்சியில் வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை, வழங்கப்படாத இணைப்புகளின் எண்ணிக்கை, இ-சேவையின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சான்றுகளின் விபரம் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், பள்ளிக்கல்வித்துறையின் மூலம் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்ட விபரம், அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து விபரம், முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட காப்பீட்டு அட்டைகளின் எண்ணிக்கை, அறுவை சிகிச்சை, ஸ்மார்ட் கார்டுகள் வழங்கிய விபரம். பொது சுகாதாரத் துறையின் கீழ் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவியின் கீழ் பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கிய விபரம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் புதுக்கோட்டையில் கட்டப்படவுள்ள வீடுகளின் விபரம், மாவட்ட வழங்கல் அலுவலகத்தின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளிடமிருந்து முதியோர் உதவித்தொகை மற்றும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வரப்பட்ட விண்ணப்பங்களின் விபரம் உள்ளிட்ட பல்வேறு தகவல் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பொது மக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழக அரசின் திட்டங்களை புதுக்கோட்டை மாவட்ட பொது மக்களுக்கு விரைவாக கிடைக்கும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, திட்ட இயக்குனர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.சந்தோஷ்குமார், சார்ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்.இ.ஆ.ப., இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**